# நமது தெய்வீக முன்மாதிரி

*உன்னதமானவருடைய ஒரே பேறான குமாரன் பல காரணங்களுக்காக இந்த பூமியைக் கிருபையினால் நிறைக்கத் தம்மைத் தாழ்த்தினார். அவைகளில் ஒன்று மலைப் பிரசங்கத்தையும் மற்றும் பல தெய்வீக போதனைகளையும் முன் வைப்பதாக இருந்தது. அவர் வந்ததற்கான இன்னொரு காரணம் அவர் தம் இரத்தத்தைச் சிந்துவதற்காகும். மரணத்தை ஜெயித்தல் என்பது இன்னும் வேறொரு காரணமாக இருந்தது. நமக்கு ஒரு முன்மாதிரியாக அவர் இருக்கும்படியாகவும் அவர் வந்தார். பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களைப் போலச் செய்ய முயற்சிப்பார்கள் என்பதைப் பரலோகத்தின் தேவன் அறிந்திருந்தார். பெரியவர்களுக்குக் கூட ஒரு முன்மாதிரி தேவை என்பதை அவர் அறிந்திருந்தார். நம்மில் எவரொரு வரும் அவரது அடிச்சுவடுகளை முழுமையாகப் பின்பற்ற முடியாதவர்களாகவே இருக்கின்றோம், ஆனால் நாம் ஒரு பரிபூரணமான முன்மாதிரியைப் பெற்றுள்ளோம் என்பதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.*

## அவருடைய இளமைப் பருவம்

*சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் ஆகியோருக்கு இயேசு ஒரு முன்மாதிரியாக இருக்கின்றார். கிறிஸ்துவின் இளமைப் பருவம் பற்றிப் பரிசுத்த ஆவியானவர் நமக்குச் சிலவற்றைக் கூறியுள்ளார். லூக். 2:51ல் அவர் தமது தாய்க்கும் தகப்பனுக்கும் ‘‘கீழ்ப்படிந்து’’ இருந்தார் என்று கூறப்படுகின்றது. ஒரு குழந்தையானது தனது பெற்றோருக்குக் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று வாழ்வின் தலையாய சட்டங்களில் ஒன்றாக உள்ளது, மற்றும் இதுவே புறக்கணிக்கப்படுவதில் முன்னுரிமையுடையதாகவும் உள்ளது.*

*மேலும், இளைஞர் என்ற வகையில் இயேசு மத ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அவர், “[தம்] பிதாவுக்கடுத்தவைகளில் இருக்க வேண்டும்” (லூக். 2:49) என்று அவர் கூறினார். அவர் “காட்டுத்தினையை விதைக்கவில்லை’’ மற்றும் பாவம் செய்யவில்லை. சிறுவர்களும் சிறுமியர்களும் தாங்கள் இளம் வயதுள்ளவர்களாய் இருக்கையில் தூய்மையாகவும், நேர்மையுள்ளவர்களாயும் இருப்பதற்கு இயேசுவின் முன்மாதிரியில் இருந்து கற்றுக் கொள்ள முடியும்.*

## அவருடைய உலகம் சார்ந்த வேலை

*இயேசு ஒரு தச்சராக ஆனார் (மாற். 6:3) என்று வேதவசனங்களில் எழுதப்பட்டது தற்செயலானது அல்ல. அவர் தச்சுத் தொழிலைச் செய்ய*

வேண்டும் என்று ஒருக்காலும் நோக்கங் கொண்டதில்லை, ஆனால் அவர் அந்தத் தொழிலைக் கற்றுக் கொண்டார் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. நாம் உழைப்பின் மேன்மையை மதித்து, ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ளும் நல்லறிவு உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதற்காகவே இது முன் வைக்கப்பட்டுள்ளது என்பது உறுதியானதாகும். மகனுக்குத் தொழில் ஒன்றைக் கற்றுத் தராதவன் அவனுக்குத் திருடக் கற்றுத் தருபவன் போலவே இருக்கின்றான் என்று பழங்கால ரபீக்கள் யூதப் பெற்றோர்களுக்குப் போதித்தனர்.

## அவருடைய ஞானஸ்நானம்

ஞானஸ்நானம் பெறுவதற்காக இயேசு கலிலேயாவிலிருந்து சுமார் எழுபது மைல்கள் தொலைவில் இருந்த, யோவான் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த இடமாகிய யோர்தானுக்கு நடந்து சென்றதில் ஒரு முன்மாதிரியாக இருக்கின்றார். நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு எவ்வளவு தூரம் நடந்து செல்லுவீர்கள்? சில மக்கள் ஒரு அடி கூட எடுத்து வைக்க மாட்டார்கள். சிலர் ஞானஸ்நானத்தை முற்றிலுமாக மறுதலிக்கின்றனர். இவர்கள் இயேசுவின் முன்மாதிரியைக் கவனிப்ப தில்லை என்பது தெளிவு. இயேசு கழுவப்பட வேண்டிய பாவம் எதுவும் இல்லாதவராகையால், இவ்விஷயத்தில் அவருடைய முன்மாதிரியானது விசேஷமாய்க் கவனிக்கப்பட வேண்டியதாய் உள்ளது. அப்படியிருந்தும், அவர் ஞானஸ்நானத்தை வலியுறுத்தினார். அவரது பிதாவானவர் எல்லா மக்களும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று கட்டளையிட்டிருந்ததை அவர் அறிந்தார், மற்றும் அவர் பாவமற்ற வராயிருந்தும், தேவனுடைய ஒவ்வொரு கட்டளையையும் அவர் நிறைவேற்ற விரும்பினார். அவர் தமக்காக இக்கட்டளையைக் காத்துக் கொள்ளும்படி பிரசங்கியாரிடத்தில் (யோவான் ஸ்நானனிடத்தில்) பேச வேண்டியிருந்தது. அவர் முதல் முயற்சியை எடுத்தார். உங்கள் வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இவ்விஷயத்தில் இயேசுவின் முன்மாதிரியைப் பற்றி நீங்கள் என்ன கூற முடியும்?

## அவரால் எதிர்க்கப்பட்ட சோதனை

எஜமானர் சோதனையைச் சந்தித்த வழிமுறையிலும் மாபெரும் முன்மாதிரியாகவே விளங்குகின்றார். மனிதப் பிறவி என்ற வகையில் அவர் நம் எல்லாரைப் போலவே சோதனைகளுக்கு உட்பட்டவராய் இருந்தார். நாம் வேத வசனத்தின் மேற்கோள்களைப் பயன்படுத்துதல் என்பது சோதனையை எதிர்த்து நிற்கும் வழிமுறைகளில் ஒன்று ஆகும். இயேசு பழைய ஏற்பாட்டின் வசனப் பகுதிகளை அறிந்தவராகவும், அவைகளை மேற்கோள் காட்டக் கூடியவராகவும் இருந்தார். தேவனுடைய வசனமானது கருக்குள்ள பட்டயமாக உள்ளது, பிசாசானவன் அதனுடைய வெட்டுகின்ற வல்லமைக்கு முன் நிற்க முடியாது. ஆகையால், நானும் நீங்களும், நமது ஆத்துமாக்களை ஆபத்துக்குள்ளாக்க விரும்பாதிருந்தால்,

பிசாசானவனின் அறைகூவல்களைச் சந்திப்பதில் அந்த மாபெரும் முன்மாதிரியைப் பின்பற்றுவோம். நாம் வேதாகமத்தைக் கற்றுக் கொண்டு அதிலிருந்து மேற்கோள் காட்டக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

## இழந்து போகப்பட்டவர்களுக்கான அவருடைய அன்பு

பாவம் நிறைந்த ஆத்துமாக்களுக்குப் போதிப்பதற்கான வைராக்கியம் என்பது நமது மாபெரும் முன்மாதிரியிடம் உள்ள இன்னுமொரு தலை சிறந்த பண்பாகும். இயேசு தமது காலத்திலிருந்த மார்க்கத் தலைவர்களிடம் தாம் புகழ் இழந்தவராகக் காணப்படக் கூடிய வேளையிலும், பாவம் நிறைந்த, புறம்பே தள்ளப்பட்ட மனிதர்களிடத்தில் தமது நேரத்தைச் செலவிட்டார். ஒருமுறை, அவர் பசியாய் இருந்த போதிலும், சரீரப் பிரகாரமான உணவின் மீது உள்ள தமது ஆர்வம் யாவற்றையும் இழக்குமளவுக்கு பாவியிடம் பேசுவதில் அவர் அதிகமாய் ஈடுபாடு கொண்டார். மற்றவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள நீங்கள் ஆர்வம் குறைந்தவர்களாய் இருந்தால், இவ்வகையில் நீங்கள் உங்கள் தலைவரை/முன்னோடியைக் கண்டு கொள்ளாமல் இருக்கின்றீர்கள்.

## அவரது எதிரிகளிடத்தில் அவருடைய அன்பு

இயேசுவைத் தவறாக நடத்தியவர்களிடத்தில் அவரது எண்ணப் போக்கானது அவரது வாழ்வின் மாபெரும் அத்தியாயங்களில் ஒன்றை அமைக்கின்றது. நமக்கு நன்மை செய்பவர்களுக்கு நாம் நன்மை செய்கையில், இயேசு தம்மைத் தவறாக நடத்தியவர்களிடத்தில் அன்பும் பரிதாபமும் உள்ள இருதயம் கொண்டிருந்தார். அவர், “பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக் கிறார்களே” (லூக். 23:34) என்று கூறினார். பேதுரு பின்வருமாறு எழுதினார்:

> கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை (1 பேது. 2:21, 22).

இந்த விஷயங்கள் எல்லாவற்றிலும் நம்மில் பலர் இயேசுவைப் பின்பற்றக் கூடியவர்களாய் இருக்க முடியுமா என்பது சந்தேகமாய் உள்ளது, ஆனால் முயற்சிக்காமல் இருப்பது பாவமாகும், ஆண்டுகள் கடக்கின்ற போது நாம் இன்னும் சிறப்பாகச் செய்ய முடியும்.

## பிதாவுக்கு அவருடைய கீழ்ப்படிதல்

*இயேசு தம்முடைய பூமிக்குரிய பெற்றோருக்குக் கீழ்ப்படிதலில் அனுபவமும், அவருடைய பரலோக பிதாவின் கட்டளைகளைக் காத்துக் கொண்டதும் அவர் கெத்செமெனே தோட்டத்திற்கு வந்த போது உதவின. பழக்கமான அந்த இடத்தில், நள்ளிரவு வேளையில், எஜமானர் முகங்குப்புற விழுந்து, ''தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார்'' (எபி. 5:7). அவர் மரிக்க விரும்பவில்லை. ஏனெனில் சிலுவையில் ஆணியடிக்கப்படுதல் என்பது உங்களுக்கும் எனக்கும் போலவே அவருக்கும் வலி நிறைந்த பெரும் துக்கமாகவே இருந்தது. அவர் தமது சரீரப் பிரகாரமான விருப்பத்தை மறுதலிக்க வேண்டியதாக இருந்தது. "அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி'' (எபி. 5:8, 9) என்று நாம் வாசிக்கின்றோம்.*

*நாம் எதை விரும்புகின்றோமோ அதை மறுதலிக்கவும், சுயநலமற்ற முழு இருதயத்துடன் நம்மையே ஒப்புக் கொடுக்கவும் முடியாமல் போனால், நாம் கீழ்ப்படியக் கற்றுக் கொண்டிருக்கவில்லை என்றே ஆகின்றது. இயேசு தாம் தேவனுடைய குமாரன் என்பதால் சரீரத் துன்புறுத்தலிலிருந்து விதிவிலக்கு உரிமைகோரவில்லை. அவர் இப்படிப் பட்ட எண்ணப்போக்கைக் கொண்டிருந்ததால், ஆசீர்வதிக்கப்பட்ட அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற நாம் எப்படி மறுக்க முடியும்? (பிலி. 2:5ஐக் காணவும்.)*